

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (13.06.2023) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, சிப்காட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 537 பள்ளிகளுக்கு பலசெயல்பாட்டு அச்சுப்பொறிகளை (MULTI FUNCTIONAL PRINTERS) கொள்முதல் செய்வதற்காக பள்ளிக்கல்வித் துறைக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச. கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி எ. சுந்தரவல்லி, செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.6.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் சென்னைக்கான முதல் காலநிலை செயல் திட்ட கையேட்டினை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர்.பிரியா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, C40 நகர ஆலோசகர் பெஞ்சமின் மேத்யூஸ் ஜான், நகர மேலாண்மை மையம் அகமதாபாத் இயக்குநர் மன்விதா பராடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஓசூர் பகுதியில் சிப்காட் தொழிற்பூங்காக்களுக்கு

# ரூ.187.20 கோடியில் சுத்திகரிப்பு ஆலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, ஜூன் 15-**

**ரூ.187.20 கோடியில் ஓசூர் பகுதியில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களுக்கான சுத்திகரிப்பு ஆலை (TTRO Plant) நிறுவு வதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.06.2023) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார். மேலும், சிப்காட் சார்பில் 537 பள்ளிகளுக்கு பலசெயல்பாட்டு அச்சுப்பொறிகளை கொள்முதல் செய்து வழங்குவதற்காக பள்ளிக்கல்வித் துறைக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டது.

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் உடனடியாக தொடங்கிட ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் பூங்காக்களை ஏற்படுத்தி, பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுநாள் வரை 6 சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 28 தொழிற் பூங்காக்களை, மொத்தம் 38 ஆயிரத்து 538 ஏக்கரில் ஏற்படுத்தி உள்ளது. இத்தொழிற் பூங்காக்களில் தற்போது வரை 3 ஆயிரத்து 142 நிறுவனங்களுக்கு நில ஒதுக்கீடு செய்து, 7 இலட்சத்து 56 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.06.2023) தலைமைச் செயலகத்தில், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில், கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் கெலவரப்பள்ளி அணையிலிருந்து சிப்காட் தொழிற் பூங்காக்கள் மற்றும் பிற தொழிற்சாலைகளுக்கு இரண்டு கட்டங்களாக 20 MLD கொள்ளளவு கொண்ட மூன்றாம் நிலை எதிர் சவ்வூடுபரவல் சுத்திகரிப்பு ஆலையை (TTRO Plant) 187.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவுவதற்கான திட்டப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் 15 மாதங்களில் நிறைவு பெறும்.

இத்திட்டத்தின் மூலம் 2092 ஏக்கரில் அமைந்துள்ள ஓசூர் சிப்காட் தொழிற் பூங்கா, 989 ஏக்கரில் அமைந்துள்ள சூளகிரி சிப்காட் தொழிற்பூங்கா மற்றும் ஓசூர் மண்டலத்தில் 1800 ஏக்கரில் அமையவுள்ள புதிய சிப்காட் தொழிற் பூங்காக்களில் உள்ள தொழிற்சாலைகளின் நீர் தேவை பூர்த்தி செய்யப்பட்டு, 800க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் பயன்பெறும். இதனால், இப்பகுதியில் நிலத்தடிநீரும், மேற்பரப்பு நீரும் பாதுகாக்கப்படும். மேலும், இதன் மூலம், இத்தொழிற் பூங்காக்களில் புதிய தொழிற்சாலைகள் அமைந்திட வாய்ப்பு ஏற்பட்டு, கூடுதலாக 6,000 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படுவதுடன், 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திடவும் வழிவகை ஏற்படும்.

சிப்காட் நிறுவனத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து திருவண்ணாமலை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் உள்ள 537 பள்ளிகளுக்கு பலசெயல்பாட்டு அச்சுப்பொறிகளை (Multi Functional Printers) கொள்முதல் செய்வதற்காக பள்ளிக்கல்வித் துறைக்கு 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையினை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் நேற்று முன்தினம் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திருமதி எ.சுந்தரவல்லி, செயல் இயக்குநர் நிஷாந்த் கிருஷ்ணா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## முதல்வரின் கேள்விக்கு நேரிடையாகப் பதிலளிக்க முடியாத அமித்ஷா!

# மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நன்மைகளை விட தீமைகளே அதிகம்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன் 15-

விவசாயிகள் தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஒன்பது ஆண்டு கால பாரதிய ஜனதா கட்சியின் ஒன்றிய அரசில் தமிழ்நாட்டுக்கு செய்த நன்மைகள், புதிய திட்டங்கள் என்ன என்பதை ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்குவாரா? என தமிழ்நாட்டு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார். அந்த கேள்வியில் ஆயிரம் அர்த்தங்கள் பொதிந்து கிடக்கின்றன. இதற்கு நேரடியாக பதில் சொல்ல முடியாத உள்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு செய்துள்ள நிதி ஒதுக்கீடு குறித்து பேசிவிட்டு சென்றிருக்கிறார், நிதி ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு ஆண்டும் துறைவாரியாக நடைபெறக்கூடிய ஒரு தொடர் நிகழ் வாகும்.



ஒன்றிய அரசாக இருந்தாலும், மாநில அரசுகளாக இருந்தாலும் ஆண்டுதோறும் நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு துறைக்கும் நிதி ஒதுக்கீடு செய்வது தொடர் நடவடிக்கையாகும். இந்த நிதி ஒதுக்கீடு என்பது ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாவது இயற்கையாகும். அந்த அடிப்படையில் தான் ஒன்றிய மோடி அரசும் தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இப்படி துறைவாரியாக ஒதுக்கிய நிதி பட்டியலை வெளியிட்டு விட்டு, முதல்வர் கேட்ட கேள்விக்கு நேரடியாக பதில் சொல்ல முடியாமல் நழுவியுள்ளார் உள்துறை அமைச்சர் அமித்ஷா. இந்த நிதி ஒதுக்கீடு கூட தமிழ்நாட்டில் இருந்து ஜி.எஸ்.டி. மூலம் ஒன்றிய அரசு வசூலித்த தொகையில் 20 விழுக்காடு கூட தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிடவில்லை. ஆனால் தமிழ்நாட்டு மக்களின் வரிப் பணத்தை உத்தரபிரதேசம் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு வாரி வழங்கி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வெற்று தம்பட்டம் அடிக்கிறார் அமித்ஷா!**

அடுத்து தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசும் மோடி அவர்களும் பெரும்பங்காற்றி உள்ளதாக அமைச்சர் அமித்ஷா தம்பட்டம் அடித்துள்ளார். மொழியின் பெருமையை பேசுவது மட்டும் வளர்ச்சிக்கு உதவாது. கடந்த 9 ஆண்டு காலத்தில் தமிழ் மொழிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியின் அளவு எவ்வளவு? சமஸ்கிருத வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கீடு செய்துள்ள நிதியின் அளவு எவ்வளவு? என்பதை ஒப்பீடு செய்ய அமைச்சர் தயாரா? சுமஸ்கிருதத்திற்கு ரூ.198.83 கோடி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தமிழுக்கு ரூ.11.86 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதான் தமிழ் வளர்ச்சி செய்ததா?

அடுத்து நீட் தேர்வை தமிழில் எழுதுவதற்கு அனுமதி அளித்ததாக அமித்ஷா கூறுகிறார். நீட் தேர்வு வேண்டாம் என சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டு அதை அனுப்பி வைத்தால் இன்று வரை அதற்கு அங்கீகாரம் வழங்காமல் ஒன்றிய அரசும் ஆளுநரும் இழுத்தடித்து வருகிறார்கள். இந்த நீட் தேர்வு ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்களின் மருத்துவ கல்வி கனவை சிதைத்து, பல மாணவர்களின் உயிரை பறித்து வருகிறது. ஆகவே நீட் ரத்து செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கிற நிலையில், நீட்டை தமிழில் எழுத அனுமதித்ததாக கூறுவது வேடிக்கையான ஒன்றாகும். அது விஷத்தை தங்கக் கோப்பையில் குடிப்பதற்கு அனுமதித்ததற்கு சமமாகும்.

**இதுதான் பா.ஜ.க.வின் பண்பாடு!**

தமிழ்நாட்டில் போடப்பட்டுள்ள பெருவாரியான சாலைகள் எல்லாம் காங்கிரஸ் தலைமையிலான ஒன்றிய அரசில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இடம் பெற்றிருந்த அன்றைய அமைச்சர் டி.ஆர்.பாலு அவர்களால் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் என்பதை இந்த நாடறியும். மதுரைக்கு அறிவித்த எய்ம்ஸ் மருத்துவமனையைக் கூட இன்னும் கட்டுவதற்கு ஒன்றிய அரசுக்கு மனமில்லை. ஆனால் இது குறித்து கேட்டால் அமைச்சர் அமித்ஷா அவர்கள் இது சம்பந்தமாக அ.தி.மு.க. அரசை கேளுங்கள் என்று தன்னுடைய தோழமைக் கட்சியை காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டுள்ளார். பாரதிய ஜனதாவின் பண்பாடு, உடன் இருப்பவர்களை அழித்து அதன் மீது கொடியேற்றுவது தான் என்பதை இதன் மூலம் நிரூபித்திருக்கிறார். மோடி பிரதமராவதற்கு முன்பு தமிழ்நாட்டில் பிரச்சாரத்திற்கு வந்த பொழுது சுண்டைக்காய் நாடு இலங்கை. இந்தியாவை பார்த்து பயப்படவில்லை. நான் ஆட்சிக்கு வந்தால் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லாமல் பாதுகாப்பாக தொழில் செய்வார்கள் என்று உறுதி அளித்தார். ஆனால் இன்று வரை தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், துன்புறுத்துவதும் தொடர் கதையாக இருக்கிறது.

ஆகவே மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நேரடியாக செய்தது என்ன? என்னென்ன புதிய திட்டங்களை தமிழ்நாட்டிற்கு அறிமுகப்படுத்தி இருக்கிறது. அந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது என்கிற பட்டியலை அமித்ஷாவால் வெளியிட முடியவில்லை.

ஒன்பது ஆண்டுகால ஒன்றிய பா.ஜ.க. அரசின் மூலம் தமிழ்நாட்டுக்கு விளைந்தது எல்லாம் தீமையே. இந்தி திணிப்பு, சமஸ்கிருதத் திணிப்பு, சமஸ்கிருதத்திற்கு கோடிக்கணக்கில் பண ஒதுக்கீடு, தமிழுக்கு புறக்கணிப்பு, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவேன் என்று உறுதி அளித்த மோடி அவர்கள் ஆட்சிக்கு வந்தபின் மூன்று வேளாண் சட்டங்களை கொண்டு வந்து விவசாயி களை வஞ்சிக்க முயன்றது, ஆளுநர் மூலம் போட்டி அரசு நடத்த முயன்றது, தமிழ்நாடு அரசு கொண்டு வந்த சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் தடை போட்டது போன்ற செயல்களே ஒன்றிய மோடி அரசால் தமிழ்நாட்டிற்கு நிகழ்ந்துள்ளன.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

